தகவல் கொடுத்து. அதை அனுப்புவதற்கு, ஏற்றுமதி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் போதிய முயற்சி எடுக்கப்படுகிறது இந்த மாநில அரசாங்கத்தால்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவர் அவர்களே, தரக் குறைவு இருப்பதால் ஏற்றுமதி பாதிக்கப்படுகிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆகவே. நமது அரசு தீவிரமாக முயற்சி செய்து மத்திய அரசுடன் ஆலோசனை செய்து, கலந்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள என்னென்ன முயற்சிகளைச் செய்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சிலில் மத்திய அரசினரும் தனி நபர்களும் இருக்கிறார்கள். வெளியில் உள்ளவர்களுடைய கருத்துக்களையும் திரட்டி, நல்ல முயற்சி செய்வார்கள்.

திருப்பூர் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கம்

*8 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கத்தில் நடந்துள்ள முறைகேடுகள் பற்றி 29—3—1968-ம் தேதி அமைச்சர் அவர்கட்கு, திருப்பூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினரிடமிருந்து புகார் கடிதம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) முன்னாள் கணக்கராகிய திரு. சிவலிங்கம், சங்க உறுப்பினர்களுக்குச் சங்கம் திருப்பிக் கொடுக்க வேண்டிய சந்தாத் தொகைக்காக பொய்க் கைசாத்துக்களைத் தயாரித்ததன் மூலம், சங்க நிதியிலிருந்து ரூ. 839.90 கையாடல் செய்தார். இந்தத் தொகை முன்னாள் கணக்கரிடமிருந்து வசூலிக்கப்பட்டது. அவர் மீது குற்ற நடவடிக்கைகளும் தொடரப்பட்டன. நீதிமன்றம் கலையும்வரை சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும், ரூ 75 அபராதத் தொகை செலுத்த வேண்டுமென்றும், தவறினால் 3 திங்கள் கால அளவு சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் பல்லடம் துணை மாஜிஸ்ட்ரேட் தீர்ப்புக் கூறினார்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, அப்படி கூட்டுறவுத் துறையில் தவறு செய்பவர்களுக்கு அபராதம் விதித்தும், அபராத கட்டணத்தை வசூலித்தும், அவர்களுக்குத் தண்டனை கொடுக்கும் முறையிலும் சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

1971 அக்டோபர் 21]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் அதைக் கடமையாகக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழில் தந்திச் செய்திகள்

* 9 **வினா—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழில் தந்தி அடிக்கும் முறையினைச் செயல்படுத்து மாறு மத்திய அரசைத் தமிழ் நாடு அரசு கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) அந்தந்த வட்டார மொழிகளில் எழுதி அனுப்பப்படும் தந்திச் செய்திகளைப் பெற்றுக்கொண்டு, தந்தி அனுப்புவதற்கு வகை செய்ய வேண்டுமென்று மத்திய அரசை, மாநில அரசு வற்புறுத்தி யுள்ளது. ஆனால் இது நடைமுறையில் ஏற்கக் கூடியதாக இல்லா மையால், இக்கருத்தை ஒப்புக்கொள்ள இயலாதென்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, தமிழில் தந்தி அடிக்கும் முறையை துரிதப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை நீண்டகாலமாக தமிழ்நாடு மத்திய அரசாங்கத்திடம் எடுத்துக் கூறி வருகிறது. நடைமுறையில் சிக்கல் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நடைமுறையில் உள்ள சிக்கல் எத்தகையது என்பதை விளக்கிக் கூறி, மீண்டும் தமிழில் தந்தி யடிக்கும் முறையை கையாள வேண்டுமென்று, மத்திய அரசோடு தமிழக அரசு தொடர்பு கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்திடம் நம்முடைய கோரிக்கை குறித்து வலி யுறுத்தப்பட்டது. மீண்டும் நம்முடைய கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துவோம்.

DR. H. V. HANDE : Sir, is the Hon. Minister aware of the fact that Money Order and Telegraph forms are given to the people only in Hindi and not even in English and Tamil and if so, whether it would be possible for this Government to impress on the Centre that as far as Tamil Nadu is concerned, Money Order and Telegraph forms should contain Tamil and English words also?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தியில் மாத்திரம் மணியார்டர் பாரம் இருக்குமானால், அது கண்டிக்கத் தக்கது. ஆங்கிலத்திலும் இருக்க வேண்டுமென்றுதான் அரசாங்கம் வற்புறுத்தியுள்ளது. கனம் அங்கத்தினர் சொல்வது போன்று அப்படியிருக்குமானால், மத்திய அரசாங்கத்தை மீண்டும் வற் புறுத்துவோம்.